ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 470)

Jun (2) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)……….......................................……3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)........……………………………..26

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 435)

7-2.7. பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய் பற்றிலார் பற்ற நின்றானே
கால சக்கரத்தாய் கடல் இடம் கொண்ட கடல் வண்ணா கண்ணனே! என்னும்
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய் என்னும் என் தீர்த்தனே என்னும்
கோல மா மழைக்கண் பனி மல்க இருக்கும் என்னுடைக் கோமளக் கொழுந்தே

பொருள் – மென்மையான அழகான தளிர் போன்ற எனது இந்தப் பெண், “அனைத்து இடங்களிலும் அடியார்கள் அல்லாதவர் விஷயத்தில் துன்பமும், அடியார்கள் விஷயத்தில் இன்பமும் படைத்தாய். பல அவதாரங்கள் செய்து, உள்ளும் புறமும் உன்னைப் பற்றாத ஜயந்தன் போன்றவர்களும் கூட பற்றும்படியாக நின்றாய். அடியார்கள் உன்னை வந்து அடையும் காலம் என்பது உனது கட்டுப்பாட்டில் வைத்தபடி, மாதம் ருது வருடம் போன்றவற்றைக் கொண்டதான காலம் என்ற சக்கரத்திற்கு நிர்வாஹகனாக உள்ளாய். அடியார்களைக் காப்பாற்றுவதற்காகத் திருப்பாற்கடலில் சாய்ந்து கிடப்பது போன்று திருக்கண்கள் வளர்பவனே! திருப்பாற்கடலை விட்டு இந்த இருள் நிறைந்த பூமியின் காப்பாற்றும் செயல் விஷயமாக க்ருஷ்ணனாக வந்தவனே!”, என்கிறாள். "அந்த அவதார காலத்தின் பின்பு வந்தவர்களுக்காக, அழகான மீன்கள் நிறைந்த குளிர்ந்த தண்ணீர் கொண்ட நீரால் சூழப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலில் அருகில் உள்ளவனே!", என்கிறாள். “இப்படிப்பட்ட ஸௌலப்யம் காரணமாக நான் மூழ்கி நீராடும்படியான தீர்த்தனே!”, என்கிறாள். இப்படிப்பட்ட

துயரம் நிறைந்த ஒலியைக் கேட்ட பின்னரும் நீ வராமல் உள்ளதால், அழகாகப் பெருத்து குளிர்ந்த இவளுடைய கண்ணானது, அதிகமாக கண்ணீருடன் உள்ளபடியாக நிற்கிறாள். (குறிப்பு - இந்தப் பாசுரமானது, திருத்தாயாரானவள் முன்னிலை சொல் ஏதும் இன்றி கூறுவதாக உள்ளதால், தன்னுடைய உள்ளத்திலேயே இரங்கியபடி இருத்தல் எனலாம். அல்லது “கடல் வண்ணா” என்பது முடிய திருத்தாயார் சொற்களாகவும், “கண்ணனே" என்று தொடங்கி நாயகியின் சொற்களாகவும் கொள்ளலாம்).

அவதாரிகை - ஆச்ரயங்களை யநுஸந்தித்து, பொறுக்குமளவுகளிலே யன்றோ ஸுகது:கங்களைச் சுமத்துவது? இப்படி என்னைப் படுத்தலாமோ என்னாநின்றாளென்கிறாள். “ஆச்ரிதரை வாழ்விக்கையும் அநாச்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றே உம்முடையபடி என்கிறாள்” என்று பிள்ளான். இக்கோமளக் கொழுந்துக்கு, கைம்முதலொன்றுமில்லாதார் பற்றினால் ரக்ஷிக்கக் கடவ நீர்மையுடையவன் ஸந்நிதியிலே இதெல்லாம் படவேண்டுகிறது, என்னோட்டை ஸம்பந்தமென்று மநோரதிக்கிறாள்.

விளக்கம் – “பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்” என்பதற்கு இரண்டுவிதமான பொருள்கள் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இரண்டுவிதமான அவதாரிகைகளைக் கூறுகிறார். மேலும், “என்னுடைக் கோமலக்கொழுந்து, கோல மாமழைக்கண் பனி மல்க இருக்கும், பற்றிலார் பற்ற நின்றானே” என்கிற பதங்களில் கருத்தை வைத்து மற்றொரு அவதாரிகையும் என்பதாக மூன்று வகையான அவதாரிகைகளை வரிசையாக அருளிச்செய்கிறார்; இதனை, அவதாரிகையின் உள்ள “ஆச்ரயங்களை" என்று தொடங்கிக் காணப்படும் மூன்று வாக்கியங்களில் கூறுகிறார். எனது மகள், “அவரவர்களுடைய அளவுகளை எண்ணி, அவர்களால் பொறுக்கும் அளவிற்கு அல்லவோ இன்பதுன்பங்களைத் தரவேண்டும். இவ்விதம் என்னைத் துன்புறுத்தலாமோ?”, என்று கேட்கிறாள்; இது முதல் அவதாரிகை கருத்து ஆகும். அல்லது, “உனது அடியார்களை வாழும்படிச் செய்தல், அடியார்கள் அல்லாதார் வீழும்படிச் செய்தல் என்பது அல்லவோ உனது செயலாற்றும் விதம்; இப்போது அது மாறியதே” என்று கேட்பதாகப் பிள்ளான் அருளிச்செய்வார்; இது இரண்டாவது அவதாரிகை கருத்தாகும். அல்லது, “கைம்முதல் ஏதும் இல்லாதவர்கள் வந்து சரணம் புகுந்தால் ரக்ஷிக்கக் கூடிய அவனுடைய அருகாமையில் உள்ளபோதிலும் கோமளக்கொழுந்து போன்ற எனது

இந்தப் பெண், இது போன்று பல துன்பங்களை அடைய வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் எனது ஸம்பந்தம் ஆகும்", என்று எண்ணுகிறாள்; இது மூன்றாவது அவதாரிகை கருத்து ஆகும்.

வ்யாக்யானம் - (பால இத்யாதி) இடமறிந்து ஸுகது:கங்களைப் படைத்தவனே! பாலென்றது இடமென்றபடி; அப்பாலிப்பாலென்றால் அவ்விடமிவ்விடமென்றபடி. பாலவாகஸ்த்தாநேஸ்த்தாநேயாக. உம்மைப் பிரிந்தார் எல்லாரும் அநுபவிக்கும் து:கத்தை இவளொருத்தியை அநுபவிக்கப் பார்த்தால் இவளால் பொறுக்கப்போமோ? அங்ஙனன்றிக்கே, ஆச்ரிதர் வாழவும் அநாச்ரிதர் கெடும்படியாகவுமன்றோ நீ பண்ணி வைத்தது? பாலென்பது முறை. "செய் குந்தா வருந்தீமை யுன்னடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய்குந்த"னன்றே. பண்டு கட்டின மர்யாதையும் இவளுக்கில்லையோ? பாலென்று பாகமும், இயல்வும், இடமும், ந்யாயமும், இவை நாலுக்கும் பேர்.

விளக்கம் – (பால இத்யாதி) - இடம் அறிந்து இன்ப துன்பங்களைப் படைத்தவனே! "பால" என்றால் இடம். ஆனால் "பால" என்றால் இடத்தைக் கூறுமோ என்பதற்கு விடை தருகிறார்; "அப்பால் இப்பால்" என்றால் "அந்த இடம், இந்த இடம்" என்று கூறுவது காணலாம். பாலவாக என்பது அந்த இடத்தில். "பாலதுன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" என்று நாயகி கூறும் சொற்களுக்கு ஏற்றபடி திருத்தாயார் கூறுவதைக் கூறுகிறார்; உன்னைப் பிரிந்தவர்கள் அனைவருடைய துன்பத்தையும் இவள் ஒருவளே அனுபவிக்க முயன்றால், இது அவளால் பொறுத்துக் கொள்ள இயலுமோ? அல்லது அடியார்கள் வாழும்படியாகவும், அடியார்கள் அல்லாதவர்கள் வீழும்படியாகவும் அல்லவோ நீ செய்து வைத்தாய்? இவ்விதம் கொண்டால் "பால்" என்பதற்கு "முறை" என்று பொருள் கொள்க; இந்த இரண்டுவிதமான பொருள்களுக்கு ப்ரமாணம் திருவாய்மொழி (2-6-1) - செய் குந்தா அரும் தீமை உன் அடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய் குந்தா - என்பதாகும். ஆகவே "பால" என்று தொடங்கும் பகுதிக்கு, "பொறுக்கத்தக்க இடம் அறிந்து அந்தந்த இடங்களில் இன்ப துன்பங்களைக் படைத்தவனே" என்பது முதல் பொருள்; அடுத்து, "அடியார்களாக உள்ள முறையில் சுகத்தையும், அடியவர்கள் அல்லாத முறையில் துக்கத்தையும் படைத்தவனே" என்பது இரண்டாவது பொருள்; இதற்கு முன்பு ஏற்பட்ட மர்யாதையும் இவளுக்கு இல்லையோ என்கிறார். "பால்" என்பது இடம் மற்றும் முறை என்பதாகப் பொருள் தருமோ என்பதற்கு, "பால என்றால்

பாகம், இயைபு, இடம், நியாயம் என்று பொருள்” என்கிறார்; ந்யாயம் என்றால் முறை.

வ்யாக்யானம் - தந்தாமால் பொறுக்கவொண்ணாதவை தாந்தாமே ஏறிட்டுக் கொள்ளும்போது நம்மால் செய்யலாவதுண்டோ? நம்பக்கல் குறையில்லை. பேறு தந்தாமதானால் தாங்களும் சில செய்யவேணுமென்று அவனுக்குக் கருத்தாக, (பற்றிலார் பற்ற நின்றானே) ஒரு கைம்முதலில்லாதார்க்காகவன்றோ இங்கு வந்து சாய்ந்தருளிற்று? இக்கிடை நித்யஸூரிகளுக்காகவோ? உம்முடைய பக்கல் பற்றறுத்துக் கொண்ட ஜயந்தன் போல்வார்க்கும் பற்றாயிருக்கும் அவரன்றோ நீர்! “தமேவ சரணங்கத:” அன்றோ?

விளக்கம் – இதற்கு ஸர்வேச்வரன், “அவரவர்களால் பொறுத்துக்கொள்ள இயலாதபடி உள்ளவற்றை, அவர்கள் தாங்களாகவே தங்கள் மீது ஏறிட்டுக் கொள்ளும்போது, நம்மால் ஏதேனும் செய்யமுடியுமா? நம்மிடம் எந்தக் குறையும் இல்லை. பேற்றினை அடையப்போவது அவரவர்கள் என்றால், அதற்காக அவர்களும் சிலவற்றைத் தாங்கள் செய்யவேண்டும்”, என்றான். இதற்குத் திருத்தாயார் விடை தருகிறார்; (பற்றிலார் பற்ற நின்றானே) - ஒரு கைம்முதலும் இல்லாதவர்களுக்காக அல்லவோ நீ இங்கு வந்து சாய்ந்தருளியுள்ளாய்! இங்கு கிடக்கும் இந்த நிலையானது நித்யஸூரிகளுக்காகவோ? அல்லவே! உன்னுடைய விஷயத்தில் எந்தப் பற்றுதலும் வைக்காமல் அறுத்துக் கொண்ட ஜயந்தன் போன்றவர்களுக்கும் கூட பற்றுதலாக உள்ளவன் அல்லவோ நீ? ஆனால் ஜயந்தன் பற்றினானோ என்பதற்கு ப்ரமாணம் ஸுந்தரகாண்டம் (38-31) - தமேவ சரணங்கத: - இராமனையே சரணம் புகுந்தான் - என்று கூறப்பட்டதாகும்.

வ்யாக்யானம் - அது உண்டானாலும் அதுக்கொரு காலமுண்டே என்ன, (கால சக்கரத்தாய்) அக்கால சக்கரம் நீயிட்ட வழக்கன்றோ? ஆச்ரிதர்க்காகப் பகலை யிரவாக்கினவனன்றோ? அன்றிக்கே, ப்ரதிபந்தகமுண்டேயென்னில்; ப்ரதிபந்தகத்துக்கு மருத்யுவான திருவாழியன்றே தரித்திருக்கிறது. பரிகரமுண்டானாலும் நான் தூரஸ்த்தனன்றோ என்னவொண்ணாதே! (கடலிடங் கொண்ட கடல்வண்ணா) நீ எங்களைக் காலம் பார்த்தன்றோ கிட்டக் கிடக்கிறது. ஒரு கடல் ஒரு கடலிலே சாய்ந்தாற்போலே அணித்தாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்திலையோ?

விளக்கம் – ஆனால் குற்றம் செய்தவர்களுக்கும் பற்றும் இடமாக உள்ள நிலை உள்ளது என்றாலும், அதற்கும் ஒரு காலம் உள்ளது அல்லவோ என்பதற்கு விடை தருகிறார்; (கால சக்கரத்தாய்) – அந்தக் காலசக்கரம் என்பது உனது ஆணைக்குப்பட்டு உள்ளது அல்லவோ? அதற்கு ஸர்வேச்வரன், "அவ்விதம் காலமானது நாம் இட்ட கட்டளையை ஏற்றதுண்டோ?", என்று கேட்டான்; இதற்கு விடை தருகிறாள்; உனது அடியார்களுக்கு உதவி செய்வதற்காக பகல் பொழுதையே இரவாக்கியவன் அல்லவோ? அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். ஸர்வேச்வரன், "ஆனாலும் தடைகள் இருக்கும் அல்லவோ?", என்றான்; இதற்கு விடை தருகிறார்; காலம் என்ற சொல்லானது காலத்தையும் யமனையும் குறிப்பதாகும்; "காலசக்கரத்தின் நிர்வாஹகன்" என்பது முதல் பொருள்; "யமனாகிய சக்கரத்தை உடையவன்" என்பது இரண்டாவது பொருள். அதாவது தடைகளுக்கும் யமனாகிய திருவாழியை அல்லவோ நீ வைத்துள்ளாய்! ஆனால், இவ்விதம் ஆயுதம் உள்ளபோதிலும், நான் தூரமாக உள்ளவன் என்று நீ கூற இயலாது; இதற்கான காரணம் கூறுகிறாள்; (கடலிடங் கொண்ட கடல்வண்ணா) - நீ எங்களைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ அருகில் கிடக்கிறாய். "கடல் வண்ணா" என்று கூறாமல் "கடல் இடம் கொண்ட" என்று சிறப்பித்துக் கூறுவதன் காரணத்தைக் கூறுகிறார்; ஒரு கடலானது ஒரு கடலில் சாய்ந்து கிடப்பது போன்று மிகவும் அண்மையில் திருப்பாற்கடலில் சாய்ந்ததுள்ளாய் அல்லவோ?

வ்யாக்யானம் - ஆனால் அங்கே வரலாகாதோ என்ன; அவ்வலையலைக் கேட்க மாட்டாத இடையர்க்கும் இடைச்சிகளுக்குமாக க்ருஷ்ணனாய் வந்து உதவிற்றிலையோ? என்கிறாள். (கண்ணனேயென்னும்) "நாக பர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம் புரீம்" என்று அக்கிடையைவிட்டு இடையிலே வந்து உதவிற்றிலையோ? அது தப்பிற்றிறே என்ன, அவ்வவதாரம் பரத்வமென்னும்படியன்றோ கோயிலிலே வந்து சாய்ந்தருளிற்று? (சேல்கொளித்யாதி) "ஜலாந்மத்ஸ்யாவிவ" அன்றே; ஜலசரஸத்த்வங்கள் ஜலத்தைப் பிரிந்து தரிக்கிலன்றே இவள் உம்மைப் பிரிந்து தரிக்கவல்லளாவது? அவ்வூரிலே வர்த்திக்கிற உமக்குப் போருமோ இவளுக்கு முகங்காட்டாதொழிகிறவிடம். (என் தீர்த்தனேயென்னும்) நீ உபேக்ஷித்தாலும் உன்னையொழிய எனக்குச் செல்லாதபடி பண்ணினவனே! என்னுதல்; நான் இழிந்தாடும் துறையென்னுதல்.

விளக்கம் – இதற்கு ஸர்வேச்வரன், “சரி, அப்படி உள்ளபோது இந்தப் பெண் அங்கு வரலாம் அல்லவோ?”, என்றதற்குத் திருத்தாயார் பதில் கூறுகிறாள்; அந்த அலையலையைக் கேட்க இயலாதபடி உள்ள இடையர்களுக்கும் இடைச்சிகளுக்கும் க்ருஷ்ணனாக வந்து நீ உதவினாய் அல்லவோ? அலையலை என்பது, “அலை” என்று ஒலியாக, “அலையலை” என்று மிகப் பெரிய ஒலியாக, மிக்க ஓசை கொண்ட ஸமுத்ரத்தைக் காண்பிக்கிறது. ஆனால் இவ்விதம் கடல் இடம் கொண்டவனோ க்ருஷ்ணனாக வந்தான் என்ற கேள்விக்கு விடை தருகிறார்; ஹரிவம்ஸம் (113-62) - நாக பர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம் புரீம் - ஆதிசேஷன் என்ற படுக்கையை விட்டு எழுந்து மதுரா நகரத்திற்கு வந்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, அங்கு கிடப்பதை விடுத்து நடுவில் வந்து உதவவில்லையோ? “நடுவில்” என்றால் ஆயர்கள் நடுவே என்று பொருள். ஆனால் அது காலம் கடந்ததால் கிட்டவில்லை அல்லவோ என்பதற்கு விடை தருகிறாள்; அப்படிப்பட்ட க்ருஷ்ணாவதாரம் கூட பரத்வம் போன்று தூரத்தில் உள்ளது என்று கூறும்படியாக அல்லவோ இங்கு வந்து திருவரங்கம் பெரியகோயிலில் சாய்ந்தருளினாய்? (சேல்கொளித்யாதி) அயோத்யாகாண்டம் (53-24) – ஜலாந்மத்ஸ்யாவிவ - தண்ணீரிலிருந்து மேலே எடுக்கப்பட்ட மீன்கள் போன்று ஆனான் - என்பதற்கு ஏற்ப, நீரில் உள்ள உயிர்களை நீரிலிருந்து பிரித்தால் அவை உயில் பிழைக்கும் என்றால் அல்லவோ இவளும் உன்னைப் பிரிந்தாள் உயிர் தரிப்பாள்? அந்த ஊரில் வசிக்கும் உமக்கு இவளுக்குத் திருமுகம் காண்பிக்காமல் உள்ள நிலை ஏற்குமோ? (என் தீர்த்தனேயென்னும்) - தீர்த்தன் என்பதற்கு இரண்டு பொருள்; தூய்மையாக உள்ள தன்மை மற்றும் ஸௌலப்ய தன்மை. நீ விலகினாலும் உன்னை அல்லாமல் வேறு யாரிடமும் சொல்லாதபடிச் செய்தவனே; தீர்த்தன் என்பதற்கு கூறப்பட்ட இரண்டு பொருள்களில், முதல் பொருளுக்கு “உனக்கு மட்டுமே நான்” என்று என்னைச் செய்தவன் என்பதாகும். அடுத்து இரண்டாவது பொருளில், நீராடும் கரை போன்று இறங்கி நின்று மூழ்குவதற்குச் சுலபமானவன் என்று கொள்க.

வ்யாக்யானம் - (கோலமித்யாதி) தர்சநீயமாய்ப் பரந்து ச்ரமஹரமான கண் நீர் மல்க இராநின்றாள். கண்ணுங் கண்ணநீருமான அழகு, காட்டிலெறித்த நிலாவாவதே! இக்கண்ண நீருக்கு ஸாதநாநுஷ்ட்டாநத்தைப் பண்ணி பலவேளையிலே யிழப்பதே! (என்னுடைக் கோமளக்கொழுந்தே) கலக்கப்பொறாத மார்த்தவத்தையுடையவள் பிரியப் பொறுக்குமோ? "தசை முறுகினால் வைத்யர் கண் முகம் பாராதாப் போலே, மகளவஸ்த்தையைக் கண்டு தளர்ந்து

பெரியபெருமாள் முகம் பாராதே வார்த்தை சொல்லுகிறாள்" என்றருளிச்செய்வர். (கொழுந்து) உபக்நம் தேட்டமானவளவிலே தறையிலே படர விடுவதே. "பதி ஸம்யோக ஸுலபம் வய:". இப்பாட்டிலொருதலைக் கட்டின்றிக்கே யிருக்குமிதுக்குக் கருத்து "பரிஹரிக்குமெல்லை கழிந்தாள், நாம் இவர்க்குச் சொல்லுவதென்? என்று தன்னிலே நோவுபடுகிறாள்" என்று வங்கிப்புரத்து நம்பி பணிக்கும்.

விளக்கம் – (கோலமித்யாதி) - காண்பதற்கு இனிமையாக உள்ளதும், பரந்து விரிந்துள்ளதும், காண்பவர் களைப்பைப் போக்கவல்லதும் ஆகிய கண்களில் நீர் மல்க நிற்கிறாள். “கோல மாமழைக்கண்” என்பதற்கு “கண்ணுங்கண்ண” என்று வ்யாக்யானத்தில் உள்ள இரண்டு வாக்கியங்களால் பொருள் கூறுகிறார்; கண்ணும் கண்ணீருமாக உள்ள இந்த அழகான கண்கள், காட்டில் வீணாகப் போகும் நிலவு ஒளி போன்று ஆயிற்று. இந்தக் கண்களானவை ஸாதனங்களாக இருந்து பலன் பெற வேண்டிய வேளையில் இழக்கிறதே! (என்னுடைக் கோமளக்கொழுந்தே) - சேர்க்கையின் நேரத்தில் கூட அதனைப் பொறுக்க இயலாத மென்மையான இவள், பிரிவு நேரத்தை எப்படிப் பொறுப்பாளோ? காலிலோ அல்லது கையிலோ தசை முறுகினால், அதனை வைத்யர் ஒருவர் சீராக்கும்போது, வேதனையைப் பொறுத்துக் கொள்வதற்காக, அந்த வைத்யர் முகத்தைப் பார்க்காமல் திருப்பிக் கொள்வது போன்று, இவள் தனது மகளுடைய நிலைமையை கண்டு தளர்ந்து பெரியபெருமாளைப் பார்க்காமல் கூறுகிறாள்”, என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். (கொழுந்து) - கொள்கொம்பு அவசியம் தேவை என்றுள்ளபோது தரையில் படர விடுவது ஏற்புடையதோ? அயோத்யாகாண்டம் (118-34) - பதி ஸம்யோக ஸுலபம் வய: - நாயகனுடன் சேர்வதற்கு ஏற்ற எனது வயதை - என்பது காண்க. இந்தப் பாசுரத்தில் தீர்மானமான முடிவு ஏதும் இல்லாமல் நிறைவு செல்வதன் காரணம் கூறுகிறார்; இது வங்கிபுரத்து நம்பியின் கருத்தாகும்; “பரிகாரம் செய்யும் எல்லையை எனது இந்தப் பெண் கடந்தாள். இதனை நாம் பெரியபெருமாளிடம் கூறவும் வேண்டுமோ?”, என்று கருதி, திருத்தாயார் தானே நோவு அடைகிறாள்.

7-2-8. கொழுந்து வானவர்கட்கு என்னும் குன்று ஏந்தி கோநிரை காத்தவன் என்னும்
அழும் தொழும் ஆவி அனல எவ்வுயிர்க்கும் அஞ்சன வண்ணனே என்னும்
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் எங்ஙனே நோக்குகேன் என்னும்
செழும் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய் என் செய்கேன் என் திருமகட்கே

பொருள் – "நித்யஸூரிகளுக்குக் கொழுந்து போன்று அவர்கள் தலைக்கு ஆபரணமாக உள்ளவன்" என்பாள். அந்த மேன்மையுடன் கூடியவனாக அடியார்களைக் காப்பாற்றும் பொருட்டு க்ருஷ்ணனாக அவதாரம் செய்து, கோவர்த்தன மலையை மிகவும் எளிதாக எடுத்து, பசுக்களைக் காப்பாற்றி, மனிதர்களால் செய்ய இயலாத லீலைகளைச் செய்தவனே" என்பாள். அப்படிப்பட்ட காப்பாற்றுதல் என்பது தன் விஷயத்தில் நடக்காமல் உள்ளதால், பக்தி பரவசத்தால் கண்ணும் கண்ணீருமாக நிற்கிறாள். ப்ரபந்நர்கள் போன்று அஞ்சலி செய்தபடி உள்ளாள். கண்ணும் கண்ணீருமாக இருத்தல் மற்றும் அஞ்சலி செய்தல் ஆகிய இந்த இரண்டுமே பலன் அளிக்காமல் போவதால், உயிரும் வெந்து போகும்படியாக வெப்பமான மூச்சு விடுகிறாள். "இவ்விதம் என்னை துக்கத்தில் ஆழ்த்திய ச்யாமள திருமேனி கொண்டவனே" என்கிறாள். இப்படிப்பட்ட தனது கூக்குரலைக் கேட்ட பின்னர் வரக்கூடும் என்று எண்ணியவளாக, தனது தலையை உயர்த்தி நோக்கி, கண்களை இமைக்காதபடி உள்ளாள். "எந்தவிதத்தில் உன்னைக் காண்பேன்", என்று புலம்புகிறாள். காண்பதற்கு இனிமையான நிறைந்த நீரால் சூழப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலில் அருகில் உள்ளவனே! மஹாலக்ஷ்மிக்கு நிகரான எனது இந்த பெண்பிள்ளைக்கு நான் என்னை செய்வேன்! இந்தத் துன்பத்திற்கு அடிப்படையான காதலைக் கட்டுப்படுத்துவேனோ அல்லது வராமல் உள்ள உன்னை வரும்படி செய்வேனோ? இரண்டும் இயலாது என்று கருத்து.

அவதாரிகை – "இவளுக்கு மேன்மேலன வருகிற நோவுகள் தீர்க்கைக்கு நான் செய்வதென்?" என்கிறாள்.

விளக்கம் – "இவளுக்கு மேலும் மேலும் வருகிற நோவுகளைத் தீர்ப்பதற்கு நான் என்ன செய்வேன்?", என்று திருத்தாயார் புலம்புகிறாள்.

வ்யாக்யானம் – (கொழுந்து வானவர்கட்கென்னும்) நித்யஸூரிகளுக்கும் தலையானவனே! என்னும். அன்றியே, அவர்கள் வேராகத் தான் கொழுந்தானவன் என்னுதல். (குன்றேந்தி) லோகாந்தரத்தில் பரிமாற்றந் தேட வேணுமோ? பசுக்களுக்கும் தத் ப்ராயரான இடையர்க்கும் உதவினவனன்றோ? மேன்மையில்லாமை யிழக்கிறேனோ, நீர்மையில்லாமை யிழக்கிறேனோ என்னும்.

விளக்கம் – (கொழுந்து வானவர்கட்கென்னும்) - "கொழுந்து" என்பது ஒரு மரத்திற்கு முக்கியமானது என்பதால் "தலையானவனே" என்றாள். இரண்டாவது கருத்தாக, "அவர்கள் துக்கத்திற்குத் தான் வருந்துதல்" என்று கூறுகிறாள்; அதாவது "நித்யஸூரிகளுக்குத் தலையானவனே" என்று கருத்து. அல்லது அவர்கள் அனைவரும் வேராக, தான் கொழுந்தாக உள்ள நிலை. (குன்று ஏந்தி) - அவனுடன் கலந்து பழக வேறு லோகம் சென்று தேடவேண்டுமோ? பசுக்கள் மற்றும் அந்தப் பசுக்களின் தன்மை கொண்ட இடையர்களுக்கு உதவியவன் அல்லவோ? அவனுக்கு மேன்மை இன்றி நான் அவனை இழக்கிறேனோ அல்லது நீர்மை இன்றி நான் அவனை இழக்கிறேனா?

வ்யாக்யானம் - (அழும்) மலையை தரித்து ஒரு வர்ஷத்தைப் பரிஹரித்த நீர் இவ்வர்ஷத்தைப் பரிஹரித்தாலாகாதோ? "பஹுதாஸந்தத து:கவர்ஷிணி" என்கிற இது பரிஹரித்தாலாகாதோ? (அழும்) பாலர் செய்வதையும் செய்யும் என்னுதல்; ஸ்நேஹிகள் செய்வதையும் செய்யுமென்னுதல். (தொழும்) புகலற்றார் செய்வதைச் செய்யுமென்னுதல்; வேதாந்த ஜ்ஞாநமுடையார் செய்வதைச் செய்யுமென்னுதல். (ஆவியன வெவ்வுயிர்க்கும்) தொழுதவநந்தரம் வரக்காணாமையாலே, "ப்ரஹ்மாஸ்த்ரம் வாய் மடிந்தது" என்று, அதாஹ்யமான ஆத்மவஸ்து அக்நிமயமாம்படி நெடுமூச்செறியும்; "தீர்க்கமுஷ்ணஞ்ச நிச்வஸ்ய" என்கிறபடியே.

விளக்கம் – (அழும்) - மலையை ஏந்தி ஒரு மழையைத் தடுத்த நீ, இந்தத் துக்கம் மூலம் உண்டாகும் கண்ணீர் மழையைத் தடுத்தால் ஆகாதோ? ஸ்தோத்ரரத்னம் (44) - பஹுதாஸந்தத து:கவர்ஷிணி - பலவிதமான துக்கங்களால் ஏற்படும் மழை - என்பதற்கு ஏற்ப உள்ள இதனைத் தடுத்தால் ஆகாதோ? (அழும்) - சிறியவர்கள் செய்யும் செயலைச் செய்கிறாள். (தொழும்) - ப்ரபத்தி நிஷ்டர்கள் செய்வதைச் செய்கிறாள். வேதாந்த ஞானம் கொண்ட உபாஸகர்கள் செய்வதைச் செய்கிறாள். (ஆவியன வெவ்வுயிர்க்கும்) - தொழுதவுடன் அவன் வரக்காணாமையால், "ப்ரஹ்மாஸ்த்ரம் வாய் மடிந்தது" என்று எரிக்க இயலாத ஆத்மவஸ்துவும் கூட அக்னிமயமாகும்படி வெப்பமான பெருமூச்சு விடுகிறாள்; யுத்தகாண்டம் (117-6) - தீர்க்கமுஷ்ணஞ்ச நிச்வஸ்ய - நீண்ட வெப்பமான மூச்சு - என்பது காண்க.

வ்யாக்யானம் - (அஞ்சனவண்ணனேயென்னும்) நெருப்பிலே நீரைச் சொரிந்தாப்போலே அக்குளிர்ந்த வடிவைக் கொண்டு வந்து தோற்றவல்லையே யென்னும். "மேக ச்யாமம்" என்னும் வடிவிறே. கைகேயி வார்த்தையால் பிறந்த

தாபமடைய ஆறுங்கிடீர் அவ்வடிவழகிலே விழிக்கப் பெற்றேமாகில் என்றார்களிறே. (எழுந்து இத்யாதி) வடிவை நினைத்தவாறே தரித்தெழுந்திருந்து, வர ஸம்பாவநையுள்ள திக்கைப் பார்த்து, “ப்ரதம பரிஸ்பந்தமே தொடங்கிக் காணவேணும்” என்று இமை கொட்டாதே பார்த்துக் கொண்டிருக்கும். (எங்ஙனே நோக்குகேனென்னும்) தான் பார்த்த திக்கில் வரக் காணாமையாலே “பின்னோக்கி வந்து கட்டிக்கொள்ளும்” என்று புரிந்து பாரா நிற்கும். (எழுந்து மேல்நோக்கி) வடிவை நினைத்தவாறே தளர்த்தியிலே எழுந்திருந்து, “ஆனைக்கு உதவினாப்போலே வரக்கூடும்” என்று மேல்நோக்கிப் பார்த்து, “ப்ரதம பரிஸ்பந்தமே தொடங்கிக் காணவேணும்” என்று இமைகொட்டாதே யிருக்கும்; (எங்ஙனே நோக்குகேனென்னும்) பின்னையும் தோற்றக் காணாமையாலே, நான் உன்னைக் காணும் விரகு எது? என்னும்.

விளக்கம் – (அஞ்சனவண்ணனேயென்னும்) – நெருப்பில் நீரைக் கொண்டு வந்து சேர்த்து அணைப்பது போன்று, அந்தக் குளிர்ந்த வடிவைக் கொண்டு வந்து காண்பிக்கமாட்டாயா என்கிறார். அயோத்யாகாண்டம் (83-8) – மேக ச்யாமம் - மேகம் போன்று கறுத்தவன் –என்பது காண்க; அதாவது கைகேயியின் சொற்களால் ஏற்பட்ட துன்பம் முழுவதும் அவனுடைய அந்த மேகம் போன்ற திருமேனியைக் கண்டால் ஆறும் என்று கூறினார். (எழுந்து இத்யாதி) – ஆனால் மயக்கம் அடைந்தவள் மீண்டும் விழித்து எழுவாளோ என்பதற்கு விடை தருகிறார்; அவனுடைய திருமேனியை எண்ணியவுடன் பிழைத்து எழுந்து, அவன் வரக்கூடிய வாய்ப்புள்ள திசையை நோக்கி, “முதலில் புறப்படும் இடம் தொடங்கிக் காணவேண்டும்” என்று இமைக்காமல் பார்த்தபடி உள்ளாள். (எங்ஙனே நோக்குகேனென்னும்) - தான் ஆவலுடன் பார்த்த திசையில் அவன் வரக்காணாமையால், “பின்புறமாக வந்து கட்டிக்கொள்வான்” என்று விரும்பி நிற்கிறாள். (எழுந்து மேல்நோக்கி) - அவனுடைய திருமேனி வடிவழகை எண்ணியவுடன் தளர்ச்சியிலிருந்து எழுந்து, “யானைக்கு உதவியது போன்று வரக்கூடும்” என்று மேல் நோக்கி நின்று, “முதலில் புறப்படும் இடம் தொடங்கிக் காணவேண்டும்” என்று இமைக்காமல் பார்த்தபடி உள்ளாள். (எஎங்ஙனே நோக்குகேனென்னும்) - அதன் பின்னரும் நீ வராத காரணத்தால், “நான் உன்னைக் காணும் வழி என்ன?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (செழுந்தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்) அழகிதாய்ப் பெருத்த நீர் சூழ்ந்த கோயிலை இடமாகவுடையவனே! இப்படி ச்ரமஹரமான தேசத்திலே நீர்

வந்து சாய்ந்தது, இவள் வரவு பார்த்தன்றே? அத்தலை இத்தலையாயிற்றே? (என் செய்கேன்) கர்த்தவ்ய மடங்கலும் தானே யநுஷ்டித்தாள். நான் இனிச் செய்வதென்? உபாயாந்தர ஸாத்யமோ உம்முடைய தர்சநம்? (என் திருமகட்கே) இவளை இழக்கலாமோ உமக்கு? உம்மை ஒருவரையும் ஆசைப்பட்ட ஏற்றமன்றே அவளது? உம்மையும் அவளையும் சேர ஆசைப்பட்ட ஏற்றமுடையவளல்லளோ இவள்? ஸாக்ஷால்லக்ஷ்மி யோடொக்கச் சொல்லலா மாகாதே இவளை!

விளக்கம் – (செழுந்தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்) - ஆறாகப் பெருகும் நீர் நிறைந்த திருக்காவேரியால் சூழப்பட்ட திருவரங்கம் பெரியகோயிலை இடமாகக் கொண்டவனே! காண்பவர் களைப்பைப் போக்கும்விதமாக உள்ள இடத்தில் நீ வந்து சாய்ந்து கிடப்பது இவளுடைய வருகையை எதிர்பார்த்து அல்லவோ? ஆனால், நீ இவள் வருகையை எதிர்பார்க்கும் நிலை மாறி, இவள் உனது வருகையை எதிர்பார்க்கும் நிலை வந்ததே! (என் செகேன்) - செய்யவேண்டிய அனைத்தையும் தானே முழுவதுமாகச் செய்தாள், நான் இனி செய்யவேண்டியது என்ன உள்ளது? அல்லது மற்ற உபாயங்களால் மட்டுமே உனது தரிசனம் என்பதை நிறைவேற்றிக் கொள்ளும்படி ஆனதோ? (என் திருமகட்கே) - இவளை நீ இழக்கலாமோ? “உன்னை மட்டுமே விரும்பியபடி உள்ள ஏற்றம்” என்பதைக் கொண்டவள் அல்லவோ? உன்னையும் அவளையும் சேரவேண்டும் என்ற ஆசை கொண்ட ஏற்றம் உடையவள் அல்லவோ இவள்? மஹாலக்ஷ்மியோடு ஒப்புமை கூறலாம்படி உள்ளாள் அல்லவோ?

7-2-9. என் திருமகள் சேர் மார்வனே என்னும் என்னுடை ஆவியே என்னும்
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட நிலமகள் கேள்வனே என்னும்
அன்று உரு ஏழும் தழுவி நீ கொண்ட ஆய்மகள் அன்பனே என்னும்
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே

பொருள் – “என்னுடைய ஸ்வாமியாகிய லக்ஷ்மியானவள் தனக்கு விருப்பமான இடமாகச் சேர்ந்த திருமார்பனே!”, என்கிறாள். “அந்தச் சேர்த்தி அழகுடன் எனக்கு உயிராக எனது நெஞ்சத்தில் எப்போதும் உள்ளவனே”, என்கிறாள். “நீலவரை என்பதற்கு ஏற்ப திருமேனியின் வடிவழகிற்குச் சேரும்விதத்தில் உள்ள உனது வெண்மையான கோரைப்பற்கள் கொண்டு, ப்ரளய நீரில் முழுகி அண்ட கபாலத்தில் பதித்திருந்த பூமியை எடுத்து, நீ உனக்கு விருப்பமானவளாகக்

கொண்டுள்ள பூமிப்பிராட்டிக்கு நாயகனே!", என்கிறாள். "ஏழு ரிஷபங்களைப் பந்தயப் பொருளாக வைத்த அன்று, இடி போன்று அச்சம் விளைவிக்கவல்ல அந்த ஏழு எருதுகளையும், விருப்பமான விஷயத்தைக் கண்டது போன்று தடவி, நிதியை எடுத்துக் கொண்டது போன்று எடுத்துக் கொண்ட நப்பின்னை பிராட்டியின் நாயகனே!", என்கிறாள். இவ்விதம் இவர்கள் அனைவரின் பக்கமும் உனது ஆழ்ந்த காதலை வெளிப்படுத்தியது போன்று இவளுக்கும் உதவி செய்வதற்காகவே ஏற்பட்ட இடமாகிய திருவரங்க க்ஷேத்ரத்தையே உனது இருப்பிடமாகக் கொண்டவனே! இவளுடைய இந்தத் துன்பங்கள் முடிவதற்கான எந்த ஒரு விதத்தையும் நான் தெளிவாக அறியவில்லை.

அவதாரிகை – இவளுடைய து:கத்துக்கு ஒரு முடிவு காண்கிறிலேனென்கிறாள்.

விளக்கம் – "இவளுடைய துக்கத்திற்கு ஒரு முடிவு காண இயலவில்லை", என்கிறாள்.

வ்யாக்யானம் - (என் திருமகள் சேர் மார்பனே யென்னும்) என் பேற்றுக்குப் புருஷகாரமில்லாமல் இழக்கிறேனோ? என்னும். விசிஷ்டத்திலன்று என் என்கிற இது; விசேஷணாம்சத்திலே; அதாவது - என் என்கிறவிடம் திருமகளிலே யந்வயிக்கிறது: மார்பனே என்கிறவிடத்தில் அந்யவயிக்கிறதன்று. அநந்தாழ்வான் தன் பெண்பிள்ளையை "என்திருமகள்" என்று திருநாமஞ் சாத்தினான்; பட்டர் பெருமாளுக்கு "அடியேனை 'ஸ்த்ரீதநமாகப் பிராட்டிக்கு வந்தவன்' என்று திருவுள்ளம் பற்றவும்; நானும் 'இவர் எங்கள் நாய்ச்சியார்க்கு நல்லர்' என்று, அவ்வழியே 'அழகிய மணவாளப்பெருமாள்' என்று நினைத்திருக்கவுமாக வேணும்" என்று வேண்டிக் கொண்டார்.

விளக்கம் – (என் திருமகள் சேர் மார்பனே யென்னும்) - மஹாலக்ஷ்மியைக் கூறியதன் காரணத்தை உணர்த்துகிறார்; "எனது பேற்றை அடைவதற்கு ஏற்ற ஒரு புருஷகாரம் இல்லாமல் நான் அந்தப் பேற்றை இழக்கிறேனோ?" என்கிறாள். "என்" என்பது மஹாலக்ஷ்மிக்கான அடைமொழி. இவ்விதம் இது மஹாலக்ஷ்மியைக் குறிப்பதைச் சில நிகழ்வுகளால் உணர்த்துகிறார். அநந்தாழ்வான் தனது பெண்பிள்ளைக்கு "என் திருமகள்" என்று பெயர் சூட்டினார். அடுத்து ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீ குணரத்நகோசத்தில் (51) - மாதர் மைதிலி -- என்று கூறியதைக் கொண்டு விளக்கம் அருளிச்செய்கிறார்; பட்டர்

பெரியபெருமாளிடம், “அடியேனை ‘ஸ்த்ரீதனமாக பிராட்டியாருடன் வந்தவன்’ என்று திருவுள்ளத்தில் கொள்ளவேண்டும். இது போன்றே அடியேனும், உம்மைக் குறித்து இவர் எங்கள் நாச்சியாருக்கு நல்லவர் என்று கருத்தில் கொண்டு உம்மை ‘அழகியமணவாளப் பெருமாள்’ என்று எண்ணும்படியாக நீவீர் செய்தருளவேன்டும்”, என்று ப்ரார்த்தனை செய்தார்.

வ்யாக்யானம் - (சேர்மார்பனே) ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச் சொல்லுகிறது; அவள் ஒரு க்ஷணம் பிரியவிருக்கிலன்றோ எனக்குப் பேறு தாழ்க்கவேண்டுவது? பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்யுமவை கேட்கைக்காக நஞ்சீயரை யழைத்தருளித் தாம் அமுது செய்யா நிற்கச்செய்தே இத்திருவாய்மொழி இயலைக் கேட்டருளாநிற்க, இப்பாட்டளவிலே வந்தவாறே “என் திருமகள் சேர்மார்பனேயென்னு மென்னுடையாவியே என்னும்” என்று இயலைச் சேர்த்தருளிச் செய்ய, அத்தைக் கேட்டுக் கையையுதறி, ‘ஸ்ரீரங்கநாத’ என்று அணையிலே சாய்ந்தருளினார் பட்டர்” என்று அருளிச்செய்வர். “அப்போது மேனியிலே பிறந்த விக்ருதியைக் கண்டு ‘இவர்க்கு பகவத் ப்ராப்தியணித்தாகிறதோ?’ என்று அஞ்சியிருந்தேன்” என்று ஜீயர் அருளிச்செய்வர். (என்னுடையாவியே யென்னும்) இவர்க்கு ப்ராணன் ஒரு வாயு விசேஷமல்ல: ஒரு மிதுநமேயாயிற்று. திருமகள் சேர்மார்பனாய்க் கொண்டு எனக்கு தாரகனானவனே! என்னும்.

விளக்கம் – (சேர் மார்பனே) – “சேர்” என்று நிகழ்காலத்தில் கூறுவதன் மூலம் த்வயத்தின் உள்ள “ஸ்ரீமந்” என்பதன் பொருளைக் கருத்தில் கொள்கிறார் என்று கருத்து. இது அங்குள்ள நித்யமான சேர்க்கையைக் கூறுவதாக உள்ளது. அவள் அவனை விட்டு ஒரு க்ஷணம் பிரிந்து நின்றால் அல்லவோ எனக்குப் பேறானது தாமதப்படும்? இவளுக்கு இருவரும் சேர்ந்து நிற்பதே உயிராக உள்ளது என்பதை ஒரு நிகழ்வின் மூலம் கூறுகிறார்; ஸ்வாமி பராசரபட்டர், பெரியபெருமாள் திருமுன்பாக புராண விஷயங்களைக் கூறும் பொருட்டு, ஆழ்வார் பாசுரங்களிலிருந்து சுவையான அமிர்தம் போன்றவற்றை மேற்கோள் காண்பிப்பதற்காக, நஞ்சீயரிடம் பாசுரங்களைக் கூறும்படியாகச் சொல்லி, தான் கேட்பார். அப்போது நஞ்சீயர் இந்தத் திருவாய்மொழி பாசுரத்தில் உள்ள “என் திருமகள் சேர்மார்பனே என்னும், என்னுடைய ஆவியே என்னும்” என்று கூறுவதற்குப் பதிலாக, “என் திருமகள் சேர்மார்பனேயென்னு மென்னுடையாவியே என்னும்” என்று சொற்களை சேர்த்து அருளிச்செய்தார் (இவ்விதம் கொண்டால், “என்னுடைய திருமகள் சேரும்படியான மார்பைக்

கொண்டவன் என்று கூறப்படுகின்ற என்னுடைய ஆவியே” என்ற பொருள் வரும். இதன்படி பராங்குசநாயகியின் உயிரானது ஒரு வாயு அல்ல, இந்த திருமகளுடன் சேர்ந்துள்ள ஸர்வேச்வரன் என்றாகும்). இதனைக் கேட்டவுடன் பட்டர் தனது கைகளை உதறிக்கொண்டு “ஸ்ரீரங்கநாதா” என்று அணையில் சாய்ந்துவிட்டார். அப்போது பட்டருடைய திருமேனியில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு, இவருக்கு பெரியபெருமாளுடன் சேரும் காலம் அருகில் வந்துவிட்டதோ என்று நான் அச்சம் கொண்டேன்”, என்று இப்படியாக நஞ்சீயர் அருளிச்செய்தார். (என்னுடையாவியே யென்னும்) - இவருக்கு ப்ராணன் என்பது ஒரு குறிப்பிட்ட வாயு மட்டும் அல்ல, பொருந்தி நிற்கும் ஒரு ஜோடியே ப்ராணனாக உள்ளது. “திருமகள் சேர்ந்த திருமார்பு கொண்டபடி நின்று எனக்கு உயிர் பிழைக்கக் காரணமாக உள்ளவனே” என்கிறாள்.

வ்யாக்யானம் - (நின் இத்யாதி) ப்ரணயிநிகளுக்குக் காரியஞ் செய்யும்போது உன்னை யழிய மாறியன்றோ கார்யஞ் செய்வது? ஸ்ரீபூமிப்பிராட்டிபக்கல் முகம் பெறலாவது அவன் விபூதியைத் தன் முகேந நோக்கினாலிறே? “நின் திருவெயிறு” என்னுமித்தனை யழகுக்கு, (இடந்து நீ கொண்ட) நீயிடந்து கொண்ட ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு வல்லபனானவனே! (அன்று இத்யாதி) ஒருநாள் உதவின நீ, இன்று உதவினாலாகாதோ? நப்பின்னைப் பிராட்டியுடைய தசையை அன்றென்னுமித்தனை. ஒன்றிரண்டன்றிக்கே யிருக்கிற ருஷபங்களேழையும் தழுவி அவள் திருமுலைத் தடத்தை யணைத்தாப்போலே யிருக்கிறதாயிற்று. அவளைப் பெறுகைக்கு உபாயமாகையாலே. உருவென்று இடி. இடி போலே பயங்கரமான குரலையுடைய ஏறென்னுதல், உருவென்று மிடுக்காய், மிடுக்குத்தான் வடிவு கொண்டாப்போலே என்னுதல். “உருவுட்கு” என்று உரிச்சொல்லு. நீ கொண்ட – நீ கைக்கொண்ட.

விளக்கம் – (நின் இத்யாதி) - உனது காதலிகளுடைய விஷயங்களில் நீ செயலாற்றும்போது உன்னையே முழுவதுமாக மாற்றிக் கொண்டு கார்யம் செய்கிறாய்? ஸ்ரீபூமிப்பிராட்டியார் உன்னை நோக்கும்படிச் செய்தல் என்பது, அவளுடைய செல்வமாகிய இந்தப் பூமியை தான் நோக்கினால் அல்லவோ உண்டாகும்? இவ்விதம் செய்தால் அல்லவோ “நின் திரு எயிறு” என்பதாக உள்ள அழகுக்குச் சேரும்? (இடந்து நீ கொண்ட) - நீ இடந்து எடுத்து ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு இவ்விதமாக உதவி செய்தவனே! (அன்று இத்யாதி) - அன்று ஒருநாள் இவ்விதம் உதவிய நீ, இன்று வந்து உதவலாகாதோ? “அன்று” என்பது நப்பின்னை பிராட்டியின் நிலையைக் கண்ட அன்று என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

ஒன்று இரண்டு என அல்லாமல் ஏழு எருதுகளையும் ஒன்றாகத் தழுவி. "அடர்த்து" என்று கூறாமல் "தழுவி" என்று கூறியதன் கருத்து என்னவென்றால், அவளைப் பெறுவதற்கான உபாயமாக இந்த ஒரு வாய்ப்பு உள்ளதால், அவளுடைய ஸ்தனங்களை அணைத்தது போன்று இவனுக்கு இந்தச் செயல் உள்ளது. உரு என்றால் இடி; இடி போன்று பயங்கரமான குரல் கொண்ட எருதுகள் என்று கருத்து. அல்லது உரு என்றால் மிடுக்கு; அதாவது மிடுக்கு என்பதே வடிவம் கொண்டது போன்றுள்ள எருதுகள். (நீ) - நீ கைக்கொண்ட.

வ்யாக்யானம் - (ஆய்மகளன்பனே யென்னும்) என்னைக் கைவிட்டு என் ஸ்வாமிநிகள் பக்கலில் எங்ஙனே முகம் பெற இருக்கிறாய்? என்னும். (தென்திருவரங்கங்கோயில் கொண்டானே) தெற்குத் திக்குக்கு ச்லாக்யமான ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தை வாஸஸ்தாநமாக வுடையவனே! "எருதேழடர்த்த அவதாரத்திலே முகங்காட்டப் பெற்றதில்லை" என்னும் குறையுண்டோ? அவதாரங்கள் போலன்றியே நித்யவாஸம் பண்ணுகிறது, பிற்பாடர்க்கு உதவவன்றே? "கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்" என்னவேண்டாதபடி கோயில் கொண்டானாயிற்று.

விளக்கம் – (ஆய்மகளன்பனே யென்னும்) - வெறுப்பாக அருளிச்செய்வதாகக் கூறுகிறார்; "என்னைக் கைவிட்டு, எனது ஸ்வாமிநிகளாக உள்ளவர்களிடம், அவர்கள் பார்வையைப் பெறுவதற்காக நீ எப்படி நிற்கிறாய்?", என்கிறாள். (தென்திருவரங்கங்கோயில் கொண்டானே) – தெற்குத் திசையைக் கொண்டாடத்தக்கதாகச் செய்யவல்ல திருவரங்க க்ஷேத்ரத்தை உனது இருப்பிடமாகக் கொண்டவனே! ஏழு எருதுகளை அடக்கிய அந்த அவதார காலத்தில் நான் இருந்து உனது திருமுகத்தைக் காணபெறவில்லையே என்ற குறை உள்ளதோ? அவதாரங்கள் போன்று வந்து மறைவது என்பது அல்லாமல், எப்போதும் திருவரங்கத்தில் வசித்தல் என்பது, இந்த அவதார காலங்களுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு உதவுவதற்காக அல்லவோ? அவதாரங்கள் ஒரு காலகட்டத்தில் மட்டுமே உண்டாவதாகும் என்பதற்கு ப்ரமாணம் மஹாபாரதத்தில் – கத: ஸ்வம் ஸ்த்தாநம் உத்தமம் - தனது மேலான பரமபதத்தை அடைந்தான் - என்பதாகும்.

வ்யாக்யானம் - (தெளிகிலேன்) அங்குக் குறையற்ற பின்பு "தப்பாது" என்று தெளியவிறேயடுப்பது, அது மாட்டுகிறிலேன். "மா சுச:" என்றத்தை யநுஷ்ட்டாக

பர்யந்தமாக்கிக் கொண்டு கிடந்தால், "ஸ்த்திதோஸ்மி கத ஸந்தேஹ" என்றிருக்கவிறே யடுப்பது? அது மாட்டுகிறிலேன். இவள் தனக்கு முடிவு தெளிகிறிலேன். இவளவஸ்தை இதுவாயிருக்க, ஒரு ஜ்ஞாந லாபத்தாலே யாறியிருக்கப்போமோ?

விளக்கம் – (தெளிகிலேன்) - இவ்விதம் இங்கு வந்து சயனித்த பின்னர், எந்தவிதமான குறையும் இல்லை என்றான பின்னர், இவன் உதவுவதில் தப்பமாட்டான் என்று தெளியவேண்டும் அல்லவோ? ஆனால் அதனை மட்டும் நான் செய்யவில்லை. கீதையில் (18-63) – மா சுச: - துக்கம் கொள்ளவேண்டாம் - என்பதையே இறுதியான முடிவாக்கிக் கொண்டு நீ திருவரங்கத்தில் கிடக்கும்போது, கீதை (18-73) - ஸ்த்திதோஸ்மி கத ஸந்தேஹ – எனது அனைத்து ஐயங்களும் நான் நீங்கப்பெற்றவனாக, நிலைத்த மனம் கொண்டவனாக உள்ளேன் - என்று அல்லவோ நான் இருக்கவேண்டும்? ஆனால் அதனை நான் செய்யவில்லை. இவ்விதம் தெளிவு ஏற்படாமல் உள்ளதன் காரணம் கூறுகிறார்; (இவள்) - இவளுடைய துக்கத்திற்கு ஒரு எல்லையை நான் காண இயலவில்லை.

7-2-10. முடிவு இவள் தனக்கு ஒன்று அறிகிலேன் என்னும் மூவுலகு ஆளியே என்னும்
கடி கமழ் கொன்றைச் சடையனே என்னும் நான்முகக் கடவுளே என்னும்
வடிவு உடை வானோர் தலைவனே என்னும் வண் திருவரங்கனே என்னும்
அடி அடையாதாள் போல் இவள் அணுகி அடைந்தனள் முகில்வண்ணன் அடியே

பொருள் – ப்ரத்யக்ஷமாக அவன் தனது திருமுகத்தை காண்பிக்கவேண்டும் என்ற தீர்மானம் கொண்ட இந்தப் பெண்ணானவள், தனக்கு ஏற்ற முடிவு ஏதும் அறியவில்லை என்கிறாள். "மூன்று லோகங்களுக்கும் ஈச்வரனாகிய இந்திரனுக்கு அந்தர்யாமியாக நின்று இவை அனைத்தையும் நிர்வாகம் செய்பவனே!" என்கிறாள். "பரிமளம் ப்ரவாஹமாக வரும்படியான கொன்றைமலர்க் கொத்தைச் சூடியுள்ள ஜடைமுடி கொண்ட ருத்ரனுக்கு அந்தர்யாமியாக உள்ளவனே!", என்கிறாள். "இவர்கள் இருவருக்கும் எஜமானனாக உள்ள நான்முகனுக்கு ஆத்மாவாக உள்ளவனே!", என்கிறாள். "தன்னோடு ஒத்த வடிவம் கொண்ட நித்யஸூரிகளுக்குத் தலைவனே!", என்கிறாள். அந்த மேன்மைகளோடு கூடியவனாக, தன்னை விரும்புபவர்களுக்குத் தன்னையே அளிக்கின்ற தாராள

மனம் கொண்டவனாக, திருவரங்கம் கோயிலுக்கு நிர்வாஹகனாக உள்ளவனே!", என்கிறாள். இவ்விதம் நீர்மையையும், மேன்மையையும், தாராளத்தையும் எண்ணியபடி, அவற்றில் மட்டுமே ஈடுபட்டு, அதன் விளைவாக அவன் திருவடிகளைக் கிட்ட இயலாது என்பது போன்று கிடக்கும் இவள், நீர் நிலம் என்ற வேறுபாடு ஆராயாமல் உபகாரம் செய்யும் மழைமேகம் போன்ற வடிவம் கொண்ட அவன் திருவடிகளைக் கிட்டி அடைந்தாள்.

அவதாரிகை – இனிக் கிட்டமாட்டாளோ என்னும்படி அவஸந்நையான இவள், பெரியபெருமாள் திருவடிகளை ஸம்ச்லேஷிக்கப் பெற்றா ளென்கிறாள்.

விளக்கம் – "இனி, இவள் பெரியபெருமாளைக் கிட்டமாட்டாளோ" என்று கூறும்படியான துக்கத்தை அடைந்திருந்த இந்தப் பெண், பெரியபெருமாள் திருவடிகளில் கலக்கப் பெற்றாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (முடிவு இவள் தனக்கு ஒன்று அறிகிலேன் என்னும்) பெண்பிள்ளை வார்த்தையைத் திருத்தாயார் அநுபாஷிக்கையாலே, "இவள், தனக்கு முடிவு ஒன்றறிகிலேன்" என்னா நின்றாளென்கிறாள். இத்து:க ஸாகரத்தைக் கரை காணும் விரகு அறிகிலேனென்னுதல்; முடிந்து பிழைக்கும் விரகு அறிகிலேனென்னுதல்.

விளக்கம் – (முடிவு இவள் தனக்கு ஒன்று அறிகிலேன் என்னும்) – "முடிவு இவள் எனக்கு" என்று கூறாமல், "முடிய இவள் தனக்கு" என்று கூறுவதன் காரணம் கூறுகிறார்; அந்தப் பெண்பிள்ளை கூறும் சொற்களையே அவளுடைய திருத்தாயாரும் மீண்டும் கூறுவதால், "இவள் தனக்கு முடிவு ஒன்று அறிகிலேன்" என்கிறாள்; இதனை, "இவள் தனக்கு முடிவு ஒன்று அறிகிலேன் என்னும்" என்று வரிசைப்படுத்த வேண்டும். "முடிவு அறிகிலேன்" என்பதற்கு இரண்டுவிதமான பொருள்களைக் கூறுகிறார். இவளுடைய துக்கம் என்னும் ஸமுத்திரத்தின் எல்லையைக் காண்பதற்கான வழியை நான் அறியவில்லை; அல்லது இவள் முடிந்து பிழைக்கும் வழி என்ன என்பதை நான் அறியவில்லை.

வ்யாக்யானம் - (மூவுலகு இத்யாதி) "மூவுலகாளியே! கடிகமழ் கொன்றைச் சடையனே! நான்முகக்கடவுளே! என்னும். வடிவுடைவானோர்க்குத் தலைவனே! என்னும்" என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக்கி நிர்வஹிக்கும்;

என்னும் என்னுமது என்னுமவனாய். எம்பெருமானார் கேட்டருளி ஸாமாநாதிகரண்யத்தாலே அருளிச் செய்தருளினார்; "த்ரைலோக்யத்துக்கும் கடவனான இந்திரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய அதிகாரத்தை நிர்வஹிக்கிறவனே! என்னும், பரிமளத்தையுடைத்தான கொன்றையை ஜடையிலேயுடைய ருத்ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனே! என்னும், அவர்களோடு இவ்வருகுள்ளாரோடு வாசியற எல்லார்க்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முகனாகிற தேவதைக்கு அந்தர்யாமியானவனே! என்னும்".

விளக்கம் – (மூவுலகு இத்யாதி) – இதற்குத் திருமாலையாண்டான் பொருள் கொள்ளும்போது "என்னும்" என்பது "சொல்லப்படுவதாக" என்கிறார்; அதாவது "மூவுலகாளியே! கடிகமழ் கொன்றைச் சடையனே! நான்முகக்கடவுளே" என்று கூறும்படி வடிவு கொண்ட வானவர்களாகிய இந்த்ரன் போன்றவர்களுக்குத் தலைவனே என்று கூறுவதாகக் கொள்ளவேண்டும். இங்கு இவர் வையதிகரண்யம் என்று கூறப்படுவதான "வெவ்வேறான பொருள்களைக் கூறும் சொற்கள்" என்ற அடிப்படையில் பொருள் கொள்கிறார். இவ்விதம் கொள்ளும்போது, "மூவுலகாளியே" என்பதில் உள்ள ஏவகாரமானது "ஒன்று, இரண்டு" என்பது போன்ற எண்ணிக்கையைக் குறிப்பதாக அமைகிறது; மேலும், "என்னும்" என்பதற்கு "எண்ணுபவனாய்" என்பதாகப் பொருள் கொண்டார். இந்த விளக்கத்தை எம்பெருமானார் கேட்டருளினார். இந்தக் கருத்தானது, ஒவ்வொரு பாசுரத்திலும் "என்னும் என்னும்" என்று திருத்தாயார் கூறுவதற்குப் பொருந்தாது என்று திருவுள்ளம் கொண்டார். ஆகவே ஒரே பொருளைக் கூறுகின்ற பல சொற்கள் கொண்டதான ஸாமாநாதிகரண்யத்தால் விளக்கம் அருளிச்செய்தார். இந்தக் கருத்தானது, "மூன்று லோகங்களுக்கும் உரிமை கொண்ட இந்த்ரனுக்கும் அந்தர்யாமியாக நின்று அவனுடைய அதிகாரத்தை நிர்வாகம் செய்பவனே என்கிறாள். பரிமளம் பொருந்திய கொன்றைமலரைத் தனது ஜடையில் அணிந்துள்ள ருத்ரனுடைய அந்தர்யாமியாக இருந்து அவன் இடத்தை நிர்வாகம் செய்பவனே என்கிறாள். அவர்களுடன் இங்குள்ளவர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவருக்கும் நிர்வாஹகனாக உள்ள நான்முகனுடைய அந்தர்யாமியாக இருப்பவனே என்றாள்", என்னும் விளக்கம் அளிப்பதாக உள்ளது.

வ்யாக்யானம் - (வடிவுடை இத்யாதி) பகவதநுபவத்தால் வந்த ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நாதனானவனே! என்னும். வடிவுடை வானோர் தலைவனே என்றத்தோடு, மூவுலகாளியே என்றத்தோடு, கடிகமழ்

கொன்றைச் சடையனே என்றத்தோடு, நான்முகக்கடவுளே என்றத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவர்க்கு; மயர்வற மதிநலம் பெறுகையாலே, விசேஷணாம்சத்தில் பர்யவஸிக்குமவ ரல்லரே; ஸர்வ நிர்வாஹகனென்று உணர்ந்திருக்குமவராயிற்று இவர்.

விளக்கம் - (வடிவுடை இத்யாதி) – சரி, "வானோர் தலைவனே" என்று அவனுக்கே உரிய திருமேனி கொண்டவனாகவும், "மூவுலகு ஆளியே" என்று பொதுவாக உள்ள திருமேனியைக் கொண்டவனாகவும் ஒருசேர ஏன் அனுபவிக்கவேண்டும் என்பதற்கு விடை தருகிறார்; பகவத் அனுபவம் ஏற்பட்ட காரணத்தால் வந்த மகிழ்ச்சியானது வடிவத்தில் தோன்றும்படியாக உள்ள நித்யஸூரிகளுக்கு நாதனாக உள்ளவனே என்கிறாள். "வடிவுடை வானோர் தலைவனே" என்பதுடன், "மூவுலகு ஆளியே" என்பதுடன், "கடிகமழ் கொன்றைச்சடையனே" என்பதுடன், "நான்முகக்கடவுளே" என்பதுடன் எந்தவிதமான வேறுபாடும் இன்றி உரைப்பதாக இவருக்கு உள்ளது; இதன் காரணம் "மயர்வற மதிநலம்" பெறுவதால் ஆகும்; அனைத்தையும் நிர்வாகம் செய்பவன் என்று இவள் உணர்ந்துள்ளதால்ஆகும்.

வ்யாக்யானம் - (வண் திருவரங்கனேயென்னும்) நித்யஸூரிகளே அநுபவித்துப் போகையன்றிக்கே, நித்யஸம்ஸாரிகளும் இழவாமைக்கன்றே இங்கு வந்து கண்வளர்ந்தருளுகிறது. இங்குச் சாய்ந்தருளினதின் பலம் நான் பெறவேண்டாவோ? என்னும். ஆசைப்பட்டார்க்குத் தன்னைக் கொடுக்கும் ஔதார்யம். (அடியடையாதாளித்யாதி) "ஜீவிப்பாரைப் போலேயிருந்து, கடுக முடிந்து கொடுநின்றாள்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அப்போது, மேல்ப்ரபந்தம் நடவாது; ஆகையாலே "திருவடிகளைக் கிட்டாதாரைப் போலேயிருந்து கிரமத்திலே கிட்டிக் கொண்டு நின்றாள்" என்று அருளிச்செய்யும்படி. இதுதான் மாநஸாநுபவத்திலே ஒரு வைசத்யத்தைச் சொன்னபடி. (அடியடையாதாள்போல்) இவள் இப்போதே திருவடிகளைச் சேரமாட்டாள்; இன்னம் சிறிது காலமிருக்கும் போலேயிருந்தது; முடிந்து கொடுகின்றாளென்னுதல். இனி "ஸம்ச்லேஷிக்கப் பெறாளோ?" என்று தோற்றும்படி அவஸ்தையான இவள், கிட்டி ஸம்ச்லேஷிக்கப் பெற்றாள் காளமேகநிப ச்யாமமான பெரியபெருமாள் திருவடிகளையே என்னுதல்.

விளக்கம் - (வண் திருவரங்கனேயென்னும்) - நித்யஸூரிகள் மட்டுமே அனுபவித்துச் சென்று விடாதபடி, நித்யஸம்ஸாரிகளும் இழந்து விடக்கூடாது

என்பதற்காக அல்லவோ இங்கு வந்து திருக்கண்கள் வளர்ந்தபடி உள்ளான்! இங்கு வந்து சாய்ந்தருளியதன் பலனை நான் பெறவேண்டாமோ என்கிறாள். தன்னை ஆசைப்பட்டவர்களுக்கு தன்னையே அளிக்கின்ற தாராள குணம். (அடியடையாதாளித்யாதி) – "பிழைத்தவள் போன்று காணப்பட்டு சட்டென்று முடிந்தாள்" என்று கூறுபவர்கள் உண்டு; இவ்விதம் பொருள் கொண்டால், அடுத்து வரவுள்ள பாசுரங்களை இவளால் நாயகியாக நின்று கூறமுடியாது என்பதால், "திருவடிகளை அடைய இயலாதவர்கள் போன்று நின்று, சரியான முறையில் கிட்டி நின்றாள்" என்று அருளிச்செய்வர். ஆனால் இவ்விதம் நேரடியாக அடைந்தாளோ என்றால், இது மன அனுபவத்தில் உள்ள தெளிவைக் காண்பிக்கிறது என்று கருத்து. (அடியடையாதாள்போல்) - இவள் இப்போதே திருவடிகளைச் சேரமாட்டாள்; மேலும் சில காலம் இருப்பாள் என்பது போன்று இருந்தாள்; முடிந்தபடி இருந்தாள் எனலாம். இங்கு "அவனுடைய சேர்க்கையை இவள் பெறமாட்டளோ" என்று தோன்றும்படியான துக்கம் கொண்டிருந்த இவள், காளமேகம் போன்ற நிழல் கொண்ட பெரியபெருமாளின் திருவடிகளைக் கிட்டிக் கலந்து அனுபவிக்கப் பெற்றாள்.

7-2-11. முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி
உய்ந்தவன் மொய்புனல் பொரு நல்
துகில் வண்ணத் தூநீர்ச் சேர்ப்பன் வண் பொழில் சூழ்
வண் குருகூர்ச் சடகோபன்
முகில் வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை
ஆயிரத்து இப்பத்தும் வல்லார்
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர் பேரின்ப வெள்ளத்தே

பொருள் - தாராள குணம் கொண்ட மேகம் போன்ற இயல்பு கொண்ட பெரியபெருமாளுடைய திருவடிகளையே அடைந்து, அதற்குக் காரணமான அவனுடைய க்ருபையைப் பெற்று உய்ந்தவரும்; மிகுந்த புனல் நிறைந்த தாமிரபரணியில், துகில் போன்று நிறம் கொண்ட பரிசுத்தமான நீரைக் கொண்ட இடத்தை உடையவரும்; மது நிறைந்த மலர்கள் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட எல்லையற்ற செல்வம் நிறைந்த திருநகரிக்கு நிர்வாஹகரும் ஆகிய நம்மாழ்வார், கார்மேகம் போன்ற எல்லையற்ற அழகுடன் கூடிய பெரியபெருமாளுடைய திருவடிகள் விஷயமாக அருளிச்செய்த ஆயிரம் பாசுரங்களில் உள்ள இந்தப் பத்தை, பொருளுடன் கற்கவல்லவர்கள், மழை மேகம்

போன்று நிறம் கொண்ட பரமபதத்தில் நித்யஸூரிகளால் சூழப்பட்டு, எல்லையற்ற ஆநந்த வெள்ளத்தில் இருப்பார்கள்.

அவதாரிகை – நிகமத்தில், இத்திருவாய்மொழி யப்ஸிக்கவல்லார், இவர் பட்ட க்லேசம் படாதே திருநாட்டிலே நிரதிசயாநந்த யுக்தராய், நித்யஸூரிகள் சூழ இருக்கப் பெறுவர் என்கிறார்.

விளக்கம் – இறுதியாக, "இந்தத் திருவாய்மொழியைப் பொருளுடன் கற்கவல்லவர்கள், இவர் அடைந்த பிரிவாற்றாமை போன்ற துயரங்களை அடையாமல், எல்லையற்ற ஆநந்தம் நிறைந்தவர்களாக, நித்யஸூரிகள் சூழ வாழ்வர்", என்கிறார்,

வ்யாக்யானம் - (முகில்வண்ணன் இத்யாதி) பெரியபெருமாள் திருவடிகளைக் கிட்டி அங்குத்தை ப்ரஸாதத்தைப் பெற்று தரித்தவன். பூர்வாவஸ்தையில், ஸத்தையும் அழியும்படியா யிருக்கையாலே உய்ந்தவனென்கிறது. மொய்யென்று மிகுதிக்கும், வலிக்கும் பேர். இப்போது நீரோட்டத்தால் வந்த வலியை நினைக்கிறது. வலியையுடைத்தான ஜலத்தோடே கூடின பொருநலில் துகிலினுடைய வண்ணத்தையுடைத்தான தூநீர்த் துறைவன். சேர்ப்பன் - துறைவன். நெய்தல் நிலத்தில் தலைமகன். மொய்புனலென்னாநிற்க, தூநீரென்றது பெருவெள்ளமாயிருக்கச் செய்தே தெளிந்திருக்கும்படியைப் பற்ற. "ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா" என்கிறபடியே, தர்சநீயமான பொழிலையுடைத்தாய் உதாரமான திருநகரிக்கு நாதன்.

விளக்கம் – (முகில்வண்ணன் இத்யாதி) – பெரியபெருமாள் திருவடிகளைக் கிட்டி, அங்கு அவன் க்ருபையை பெற்று உயிர் தரித்தவர். கடந்த பாசுரத்தில் துயரம் நிறைந்து உள்ளபோது, இங்கு "உய்ந்தவன்" என்று "பிழைத்த என்ற நிலை" ஏற்பட்டதாகக் கூறலாமோ என்பதற்கு விடை தருகிறார்; முன்பு தனது இருப்பு என்பது கூட இல்லாமல், அழியும்படியாக இருந்தவர் என்பதால் இங்கு "உய்ந்தவன்" என்கிறார். (மொய் புனல் பொருநல் துகில் வண்ணம் தூநீர் சேர்ப்பன்) - மொய் என்பதற்கு மிகுதி மற்றும் வலிமை ஆகிய இரண்டு பொருள். இங்கு நீரோட்டத்தால் வந்த வலிமையானது கூறப்பட்டது. வலிமை கொண்ட நீருடன் கூடிய தாமிரபரணி நதியில், துகிலினுடைய வண்ணத்தைக் கொண்டதான தூநீர் துறைவன். "சேர்ப்பன்" என்பது துறைவன் மற்றும் நெய்தல் நிலத்தின்

தலைவன் என்று இரண்டு பொருள் தரும்; இங்கு “துறைவன்” என்ற பொருள் தருவதாக உள்ளது. “மொய் புனல்” என்று கூறிய பின்னர், “தூநீர்” என்று கூறியதால், பெரிய வெள்ளமாக உள்ளபோதிலும் தெளிந்தபடி உள்ள நிலை கூறப்பட்டது. இவ்விதம் தெளிவாக உள்ளதற்கு ப்ரமாணம் பாலகாண்டம் (2-5) - ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா - களங்கம் அற்ற, தெளிந்த நீருடைய, அழகான பெரியோர்களின் மனம் போன்றுள்ள இந்த தீர்த்தத்தைப் பாரும் – என்பதாகும். (வண்பொழில் சூழ் வண் குருகூர் சடகோபன்) - காண்பதற்கு இனிமையான பொழில்கள் கொண்ட தாராளமான குணம் கொண்ட திருநகரிக்கு நாதன்.

வ்யாக்யானம் - (முகில் இத்யாதி) காளமேகம் போலே நிரதிசய ஸௌந்தர்ய யுக்தரான பெரியபெருமாள் விஷயமாக அருளிச்செய்த சப்தாத்மகமான மாலைகளாயிரத்து இப்பத்தையும் பாவ வ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள். “பெரியபெருமாள் திருவடிகளிலே திருவாய்மொழி யாயிரமுஞ் சொல்லிற்று. ‘திருமோகூர்க்கீத்த பத்து’, ‘திருவேங்கடத்துக்கிவை பத்தும்’ என்று பிரித்துக் கொடுத்த இத்தனை; பெருமாள் திருப்பலகையில் அமுதுபடியிலே மற்றைத் திருப்பதிகள் நாயன்மார்க்கும் அளந்து கொடுக்குமாப்போலே” என்று பிள்ளையருளிச்செய்வர். (முகில்வண்ண வானத்து) அங்கிருக்கிறவனுடைய நிழலீட்டாலே அவன்படியாயிருக்கிற வானம் என்னுதல்; முகில்வண்ணனுடைய வானமென்னுதல்.

விளக்கம் – (முகில் இத்யாதி) - காளமேகம் போன்று எல்லையற்ற ஸௌந்தர்யம் நிறைந்த பெரியபெருமாள் விஷயமாக அருளிச்செய்த சொற்கள் கொண்ட மாலையாக ஆயிரத்தில் இப்பத்தையும், இதன் ஆழ்கருத்துடன் கற்கவல்லர்கள். ஆனால் ஆயிரம் பாசுரங்களும் பெரியபெருமாள் குறித்தே உள்ளது என்றால், திருவேங்கடமுடையான் போன்றவர்களுக்கு ஏதும் இல்லை என்றாகுமே என்பதற்கு விடை தருகிறார்; “பெரியபெருமாள் திருவடிகளில் ஆயிரம் பாசுரங்களையும் கூறி முடித்தார்; பின்னர் திருவாய்மொழி (10-1-11) - திருமோகூர் திருமோகூர்க்கீத்த பத்து – என்றும், திருவாய்மொழி (6-10-11) - திருவேங்கடத்துக்கிவை பத்தும் - என்று பிரித்துக் கொடுத்தார். அதாவது பெரியபெருமாள் திருப்பலசையில் அமுது பாறையில், மற்ற திவ்யதேச பெருமாள்களுக்கு அளந்து கொடுப்பது போன்று ஆகும்” என்று பிள்ளை அருளிச்செய்வார்.

வ்யாக்யானம் - (இமையவர் இத்யாதி) இவள் மோஹித்துக் கிடக்கத் திருத்தாயார் தனியேயிருந்து கூப்பிட்ட எளிவரவு தீர, நித்யஸூரிகள் திரளவிருக்க, அவர்கள் நடுவே ஆநந்த நிர்ப்பரராயிருந்து அநுபவிக்கப் பெறுவர்கள்.

விளக்கம் – (முகில் இத்யாதி) - அங்குள்ளவன் நிழல் படிவதால் அவன் போன்றே உள்ள வானம் என்று கூறலாம். அல்லது முகில்வண்ணனுடைய வானம் எனலாம். (இமையவர் இத்யாதி) - இவள் மயக்கத்தில் கிடக்க, திருத்தாயார் தனியே நின்று அவனை அழைத்த களைப்புடன் துயரமும் என்பது போன்ற ஏதும் இல்லாமல், நித்யஸூரிகள் திரளாக நிற்க, அவர்கள் நடுவில் ஆனந்தத்தை உடையவர்களாக இருந்து, அவனை நன்கு அனுபவிக்கப் பெறுவார்கள்.

திருவாய்மொழி ஏழாம் பத்து இரண்டாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 21)

1-2-15. நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து நீராட்டும் இந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்த ஆ காணீரே மொய் குழலீர் வந்து காணீரே

பொருள் – யசோதைப்பிராட்டி, தனது க்ருஷ்ணனின் திருமேனி மென்மைக்குத் தகுந்ததா என நோக்கி அரைத்த மஞ்சளால் அவன் நாக்கினை வழித்து, நீராட்டும்போது, அவன் அவளுக்குக் கட்டுண்டுக் கிடப்பான். இப்படிப் பரிபூர்ணமான குணங்கள் கொண்ட நம்பியின் மிழற்றலையும், கண்களையும், வாயின் இதழ் அசையும்படிச் சிரிக்கும் புன்முறுவலையும், மூக்கினையும் வந்து காணுங்கள். செறித்த கூந்தலையுடைய பெண்களே! நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருப்பவளத்தில் நின்றும் போந்து திருமுக மண்டலத்தில் ஸமுதாய சோபையை அநுபவிக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - பிள்ளையைத் திருமஞ்ஜநம் செய்விப்பதாக உபக்ரமித்து திருமேனிக்குத் தகுதியாக மஞ்சட்காப்பும் நேராக வரைத்து மற்றும் வேண்டும் உபகரணங்களும் சேர்த்து வைத்துத் “திருமேனிக்குத் தகுதியோ” என்று இவற்றையும் பார்த்த அசோதை இம்மஞ்சளாலே திருநாவும் வழித்து நீராட்டுகிறபோது, அவளுக்கு வசவர்த்தியான குணங்களை யுடையனாகையாலே பூர்ணனுக்கென்கிறது. மாதா முதலானாரை நாமக்ரஹணம் பண்ணுகிறவாக்கும், “என்னைப் பாரீர்”, “என்னைப் பாரீர்” என்கிறவர்களைக் கடாக்ஷிக்கிற

திருநயங்களும், மந்தஸ்மிதம் பண்ண உபக்ரமிக்கிற திருவதர ஸ்ப்புரத்தையும், அந்த ஸ்ப்புரத்தையோடே கூடின மந்தஸ்மிதமும், ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவேண்டாத திருமூக்கின் அழகுமிருந் தப்ரகாரத்தை அநுபவிக்க அழைக்கிறார். (மொய்குழலீர்) கைங்கர்யத்துக்கு பூர்வக்ஷணவர்த்தியாய் ப்ரார்த்தநா ரூபையான ப்ரபத்திகள்.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருப்பவளத்தினழகை அநுபவித்த வநந்தரம் திருமுக மண்டலத்தில் ஸமுதாய சோபையை அநுபவிக்கிறார்.

விளக்கம் – திருவாயின் இதழ் அழகினை அனுபவித்த பின்னர் திருமுக மண்டலத்தின் மிகுதியான அழகினை அனுபவிக்கிறாள்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (நோக்கியித்யாதி) திருமேனியின் ஸௌகுமார்யமறியும் யசோதைப்பிராட்டி அதுக்குத் தகுதியாம்படி பார்த்து, நேராக அரைத்த மஞ்சள்காப்பாலே திருநாவை வழித்து திருமஞ்ஜநம் செய்யும்படி விதேயதயா பூர்ணனான இவனுக்கு. (வாக்குமித்யாதி) மாதா முதலானாரை நாமக்ரஹணம் பண்ணுகிற வாக்கும், "என்னைப் பாரீர் என்னைப் பாரீர்" என்ன, அவர்களைக் கடாக்ஷிக்கிற திருநயநங்களும், மந்தஸ்மிதம் செய்ய உபக்ரமிக்கிற திருவதரஸ்ப்புரணத்தையும், அந்த ஸ்ப்புரத்தையோடே கூடின மந்தஸ்மிதமும், "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ வறியேன்" என்று நித்ய ஸந்தேஹ ஜநகமான திருமூக்குமாகிற இச்சேர்த்தியழகிருந்தபடி காணுங்கோள்; செறிந்த குழலையுடைய நீங்கள் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (நோக்கி அசோதை) - பிள்ளையை நீராட்டவேண்டும் என்று நீராட்டத் தொடங்கும்போது, திருமேனியின் ம்ருதுவான தன்மையினை உணர்ந்துள்ள யசோதை, அத்திருமேனிக்குத் தகுதியான மஞ்சளைச் சீராக அரைத்து ஏனைய சாதனங்களையும் ஒன்றாய் தன் கண்முன்னே சேர்த்து வைத்து, "இவைகள் நம் பிள்ளையின் திருமேனிக்குத் தகுமோ?" என்று நோக்கினாள். (நுணுக்கிய மஞ்சளால் நாக்கு வழித்து) - இப்படி யசோதை அந்த மஞ்சள்காப்பாலே நாவினை வழித்து நீராட்டு செய்யும்போது, இவளுக்கு வசப்பட்டபடி உள்ளதால், இத்தகைய குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டுள்ள நம்பியான கண்ணனுடைய. (வாக்கும்) – "அம்மே", "யசோதா" என்று மிழற்றிச் சொல்லும் வாயினையும், இவ்வாறு அழைக்கப்படாதவர்கள் "என்னைப் பார், என்னைப் பார்" என்றதும்,

அவர்களைக் கடாக்ஷிக்கும் கண்களையும், இப்படிக் காண, மந்தமாய் சிரிக்கத் தொடங்கும் வேளையில் அசையும் இதழினையும், இந்த அசைவால் பெருகும் முறுவலையும், (திருவாய்) – "மாட்டு உயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ அறியேன்" என்று எவ்விதத்திலும் வர்ணிக்க இயலாத திருமூக்கின் அழகினையும், இவையெல்லாம் கூடியிருக்கிற முகத்தினைக் காணவாருங்கள். (மொய்குழலீர்) - செறிந்த கூந்தலையுடைய நீங்கள் வந்து காணுங்கள். கைங்கர்யத்திற்கு ஆசையுற்று, அதனை நிறைவேற்றும் வழியாக ப்ரபத்தியைப் பின்பற்றுவர்கள் ஆவர்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்